# 3

# பாவப் பிரச்சனைக்குத் தீர்வு

## (1 யோவான் 1:5–2:2)

*ஒரு மறுஉருவாக்கப்பட்ட வாழ்வு தொடர்ந்து சுத்தி கரித்தலை அளிக்கிறது ...*

*கிறிஸ்தவராகுதல் என்பது வாழ்வின் எல்லாப் பிரச்சனைகளையும் நீக்கி விடுவதில்லை. கிறிஸ்தவர்கள் வியாதிப்படுகின்றனர் மற்றும் மரிக்கின்றனர். அவர்கள் தங்கள் வேலைகளை இழக்கின்றனர், அல்லது தங்கள் வியாபாரத்தில் தோல்வியடைகின்றனர். அவர்கள் தனிப்பட்ட உறவு முறைகளில் ஏமாற்றமடைந்தவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் குடும்பப் பிரச்சனைகளைக் கொண்டுள்ளனர். ஆனால் ஒரு கிறிஸ்தவரின் உடல்நலப் பிரச்சனைகள், நிதிநிலைப் பிரச்சனைகள் அல்லது குடும்பப் பிரச்சனைகள் என்பவை அவரால் எதிர்கொள்ளப்படுகிற மாபெரும் பிரச்சனையாக இருப்பதில்லை. பாவமே மாபெரும் பிரச்சனையாக உள்ளது.*

*கிறிஸ்தவர் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டுள்ளார். அவர் இயேசுவில் விசுவாசம் கொண்ட போது (யோவான் 8:24), தமது பாவங்களில் இருந்து மனந்திரும்பியபோது (லூக்கா 13:3), தமது விசுவாசத்தை அறிக்கையிட்டபோது (1 தீமோத்தேயு 6:12) மற்றும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றபோது (கலாத்தியர் 3:27), அவர் தமது பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக்கொண்டார் (நடபடிகள் 2:38). அந்தக் கணத்தில் அவர் மறுபடியும் பிறந்தார்; அவர் கர்த்தருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்; அவர் இரட்சிக்கப்பட்டார்.*

*இருப்பினும் கிறிஸ்தவர் இன்னமும் பாவம் செய்கின்றார்! அவர் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டிருந்தாலும், அவரது இரட்சிப்பு அவரைப் பாவம் செய்வதில் இருந்து விலக்கி வைப்பதில்லை. பாவத்தின் பிரச்சனையானது அவரைத் தொடர்ந்து பயமுறுத்துகிறது. அவர் தமது "பாவப் பிரச்சனையை" தீர்க்கப் பின்வரும் மூன்றுவழிகள் ஏதாவது ஒன்றில் முயற்சி செய்யலாம்: (1) அவர் இன்னமும் பாவம் செய்கிறபடியால், தாம் ஒருக்காலும் இரட்சிக்கப்பட்டிருக்கவில்லை என்று முடிவு செய்யலாம். அவர் உலகத்திற்குள் திரும்பிப்போவார் அல்லது மறு ஞானஸ்நானம் மூலமாகத் திரும்பவும் இரட்சிப்பை நாடுவார். (2) அவர் பாவம் செய்யாது வாழ முடியாதிருப்பதால், அவர் கிறிஸ்தவராக இருப்பதை விட்டுவிட முடிவு செய்யலாம். தேவனுடைய பிள்ளையாக இருப்பதற்குத் தாம், "மிகவும் பலவீனமாக, மிகவும் தகுதியற்றவராக" இருப்பதாக நினைத்து "வெளியேறி விடுவார்." (3) எப்படியும் தான் பாவம் செய்வேன் என்பதால் அதைப்பற்றிக் கவலைப்படுவதை விட்டுவிட்டு தன்னையே சந்தோஷப்படுத்திக்கொள்வார். இவ்வாறாக, அவர் தொடர்ந்து பாவத்தில் வாழ்கையிலேயே, கிறிஸ்தவராகவும் இருக்கத் தொடருவார்.*

இவற்றில் எதுவுமே உண்மையான தீர்வுகளாக இருப்பதில்லை. ஆனால் வேதாகமம் உதவி அளிக்கிறது. குறிப்பாக யோவானால், 1 யோவான் 2:1, 2 வசனப்பகுதியில், அதன் சந்தர்ப்பப்பொருளுடன் இணைந்து, பாவப்பிரச்சனைக்குத் தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளது. பாவம் மற்றும் கிறிஸ்தவர் பற்றி அவர் நான்கு கருத்துக்களை ஏற்படுத்துகிறார்.

## கிறிஸ்தவர்கள் பாவம் செய்யக்கூடாது

யோவான், "என் பிள்ளைகளே நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்" என்று கூறுகிறார் (1 யோவான் 2:1). (பின்வரும் வசனப்பகுதிகளையும் காணவும்: 1 யோவான் 2:15, 16; கலாத்தியர் 5:19-22; ரோமர் 6:12-14.)

யோவானுடைய வாசகர்களுக்கு இந்தச் செய்தி தேவைப்பட்டது. அவர்களில் சிலர், தேவ நம்பிக்கையற்ற இயல் என்று அறியப்பட்ட தேவதூஷணத்தை அதன் தொடக்க நிலைகளில் ஏற்றுக்கொண்டிருந்தனர் என்பது உறுதி. தேவநம்பிக்கையற்ற கொள்கையின் பல்வேறு வடிவங்கள் இருந்தன, ஆனால் அவை யாவும் பின்வருவதைப் பொதுவில் கொண்டிருந்தன: மாம்சம் - மற்றும் அதனுடன் தொடர்புடைய ஒவ்வொரு விஷயமும் - பொல்லாங்கானது; ஆனால் ஆவி - மற்றும் அதனுடன் தொடர்புடைய ஒவ்வொரு விஷயமும் - நல்லது என்று அவர்கள் நினைத்தனர்.

இறையியல் ரீதியாக இது, தேவநம்பிக்கையற்றவர்களை, இயேசுவானவர் மாம்சத்தில் வந்த தேவனாக இருக்க முடியாது என்ற முடிவிற்கு வழிநடத்திற்று. ஆவியாக இருக்கும் தேவன், துன்மார்க்கமான, பாவம் நிறைந்த மாம்சத்திற்குள் உண்மையிலேயே வாசம்பண்ணக் கூடாத அளவுக்கு மிகவும் நல்லவராக இருந்தார், இவ்வாறாக அவர்கள், கிறிஸ்து மாம்சத்தில் இருந்ததாகத் *தோற்றம் மட்டுமே அளித்தார்* என்று கூறலாம் (காண்க 1 யோவான் 4:2, 3).

ஒழுக்கரீதியாக, நம்பிக்கையின் இதே வகையானது தேவநம்பிக்கை அற்றவர்களை இரண்டு எதிர்முனைக் கருத்து நோக்குகளுக்கு எடுத்துச் சென்றது. சிலர், மாம்சம் பொல்லாங்கானது என்பதால், மாம்சத்தை வெறுத்தல் அல்லது அதை ஊனப்படுத்துதல் என்பதே, கிறிஸ்தவர்களின் பணியாக இருக்க வேண்டும் என நியாயப்படுத்தினர். இவைகள் அவர்களை குளிரான சூழ்நிலையில் உட்படுத்தவும், தங்களைத் தாங்களே பட்டினிபோட்டுக் கொள்ளவும் அல்லது கற்களால் தங்களைக் காயப்படுத்திக் கொள்ளவும் செய்யக்கூடும். இன்னொரு மிகைமுனையில், சிலர் மாம்சம் உண்மையில் தனக்குள் வாசம் செய்யும் ஆவியைப் பாதிப்பதில்லை என்று விவாதம் செய்தனர். எனவே கிறிஸ்தவர் தாம் விரும்புகிறபடி வாழலாம் - அவர் ஒரு குடிகாரராக, ஒரு பெருந்தீனிக்காரராக அல்லது வேசித்தனம் செய்பவராக இருக்க முடியும் - அது எவ்விதத் தீங்கையும் விளைவிப்பதில்லை என்று நம்பினர். உடலானது எதைச் செய்தாலும் அது ஒரு பொருட்டல்ல, நல்லதாக இருக்கக் கூடிய ஆவியின் நிலையானது தேவனுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே முக்கியமானது என்று அவர்கள் எண்ணினர்.

யோவானுடைய வாசகர்களில் சிலர் இந்தப் பிந்திய கருத்தைப் பகிர்ந்து கொண்டிருந்தனர் என்று காணப்படுகிறது, ஏனென்றால் யோவான், "...தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; ... நாம் அவரோடே

ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர்களாயிருப்போம்'' என்று கூறுகிறார் (1 யோவான் 1:5, 6).

அவர்கள், "நாம் தேவனுடன் ஐக்கியமாக இருக்கிறோம்.நமது ஒழுக்கவீனம் ஒரு பொருட்டே அல்ல, ஏனென்றால் நமது ஆவிகள் தூய்மையானவைகளாக உள்ளன'' என்று கூறியிருக்க வேண்டும். யோவான் பின்வருமாறு பதில் அளித்தார்: "நீங்கள் பொய்யான வாழ்வை வாழ்கிறீர்கள். தேவனுடைய இயல்புக்கும் அவரது வசனத்திற்கும் விரோதமான வழியில் நீங்கள் வாழ்கிறபோது அவருடன் நீங்கள் ஐக்கியம் கொண்டிருக்க முடியாது. உங்கள் செயல்கள் தூய்மையானவைகளாக இராவிட்டால் உங்கள் ஆவி தூய்மையானதாக இராது.''

ஒருவேளை நமக்கும்கூட இந்தச் செய்தி தேவைப்படலாம்: நாம் பாவம் செய்யக்கூடாது! சில கிறிஸ்தவர்கள், தாங்கள் பாவம் செய்வதை அறிகின்றனர் ஆனால் தங்கள் பாவங்களை உதறிவிட்டுப் பின்வருமாறு கூறுகின்றனர்: "எனக்கு கோபம் தலைக்கு ஏறும்போது, நான் ஆணையிடுகிறேன் என்பதை அறிகிறேன், ஆனால் நான் இவ்வாறுதான் இருக்கிறேன்''; "ஆம் நான் மிக அதிகமாக என் பொறுமையை இழந்து போகிறேன், மற்றும் சில வேளைகளில் என்னைக் கோபமூட்டிய ஆளைக் குத்திவிடுவேன், ஆனால் செந்தலையர்களாகிய ஐரீஷ் மக்களாகிய நாங்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களே!'' அதைப்போன்ற விஷயங்களைக் கிறிஸ்தவர்கள் கூறும்போது, அவர்கள் பாவம் செய்வதாகவும் அதை அறிந்திருப்பதாகவும் கூறுகின்றனர், ஆனால் பாவம் செய்வதைவிட்டுவிட அவர்களுக்கு மனவிருப்பம் எதுவும் இருப்பதில்லை. *அந்தக் கிறிஸ்தவர்கள் பாவம் செய்வதைத் தேவன் விரும்பவில்லை* என்பதை அவர்கள் அறியவேண்டும்!

1 யோவான் 1:5, 6ம் வசனப்பகுதி, கிறிஸ்தவர்களாகிய நாம் ஏன் பாவம் செய்யக்கூடாது என்றும் கூறுகிறது. ஒளியாக இருக்கும் தேவனுடன் ஐக்கியம் கொண்டுள்ள நமக்கு இருளில் நடத்தல் அல்லது பாவம் செய்தல் என்பது எவ்வளவேனும் தகுதியானதல்ல என்று யோவான் கூறுகிறார்.

ஏற்புடைய நடக்கை என்பதன் கருத்தை நாம் புரிந்துகொள்ள முடியும், அமெரிக்க ஐக்கிய நாட்டின் அதிபர், அயல்நாட்டின் தலைவரை சந்திக்க பயணமாக வந்து சேருகிறார் என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். அதிபரின் விமானம் ஓடிச்சென்று நிற்கிறது. விமானத்தின் கதவைநோக்கி குறிப்பு விளக்கு ஒளிவீசுகிறது; படிகள் உருண்டு வந்து கதவருகே நிற்கின்றன; இசைக்குழுவினர், "தலைவர் வாழ்க!'' என்று இசை எழுப்புகின்றனர். கதவு திறக்கிறது, மற்றும் அதிபர் வெளியே குதிக்கிறார், கைப்பிடிக் கட்டையின்மீது சறுக்கிச் செல்கிறார், ஒரு சில பல்டி அடிக்கிறார். தமது பிரவேசித்தலை, அயல்நாட்டுத் தலைவரின் பாதத்தில் வேடிக்கையாக விழுந்து "ஹேய், எல்லாரும் நலமா!'' என்று கூறி முடித்துக் கொள்கின்றார். உண்மையில் இப்படிப்பட்ட ஒரு காட்சியை நம்மால் கற்பனை செய்து பார்க்கவே இயலாது: அதிபர்கள் இதுபோன்ற செயல்களைச் செய்வதில்லை. இப்படிப்பட்ட நடக்கையானது அந்தப்பதவியில் இருக்கும் ஒருவருக்கு ஏற்புடையதாக இருப்பதில்லை.

ஒரு குழந்தை சபைக்கு வந்து, அது தனது கட்டை விரலைச் சப்பிக்கொண்டு, தனது பாதுகாப்புப் போர்வையைத் தனது மூக்கிற்கு எதிராகப் பிடித்துக்கொண்டு,

ஆராதனை வேளையின் போது அழத்தொடங்குகிறது, அதைப்பற்றி நாம் ஏதொன்றும் நினைப்பதில்லை. அப்படிப்பட்ட விஷயங்கள் குழந்தைகளிடத்தில் நாம் எதிர்பார்ப்பவையாகவே உள்ளன. ஆனால், ஐம்பத்தி ஐந்து வயதான மனிதர் ஒருவர், தமது கட்டைவிரலைச் சப்பிக்கொண்டு, தமது பாதுகாப்புப் போர்வையைத் தமது மூக்கிற்கு எதிராகப் பிடித்துக்கொண்டு, ஆராதனை வேளையின்போது சத்தமிட்டு அழத்தொடங்குகிறார்; நாம், "அது விசித்திரமாக உள்ளதே; ஏதோ தவறு நடந்திருக்க வேண்டும்" என்று நினைக்கிறோம். வளர்ந்த மனிதர்கள் அதுபோன்று செயல்பட மாட்டார்கள். ஒரு குழந்தைக்கு ஏற்புடைய நடக்கையானது வளர்ந்த ஒருவருக்கு ஏற்புடையதாக இருப்பதில்லை.

அதைப்போன்ற சில விஷயங்களையே யோவான் கூறுகிறார்: கிறிஸ்தவர்கள் பாவம் செய்யக் கூடாது, ஏனென்றால் தேவனுடன் ஐக்கியம் கொண்டிருப்பவர்கள் பாவம் செய்வது ஏற்புடையதாக இருப்பதில்லை! நீங்கள் மற்றவர்களுடன் பாவம் செய்வதில் ஏன் இணைவதில்லை என்பதற்கு காரணம் ஏதாவது கொடுக்கத் தேடிக்கொண்டிருந்தால், இதோ இங்கு உள்ளது: *கிறிஸ்தவர்கள் அதுபோன்ற விஷயங்களைச் செய்வதில்லை!* பாவம் என்பது ஒரு கிறிஸ்தவரின் நடக்கைக்கு ஏற்புடைய *விஷயமல்ல.*

## கிறிஸ்தவர்கள் பாவம் செய்யக்கூடாது என்றாலும், அவர்கள் பாவம் செய்கின்றனர்

யோவான், "... நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; *ஒருவன் பாவஞ்செய்வானானால்* ..." என்று கூறுகிறார் (1 யோவான் 2:1). ஒரு கிறிஸ்தவர் பாவம் செய்வதற்கு உண்மையிலேயே சாத்தியக்கூறு இருந்தது. சந்தர்ப்பப் பொருளில் யோவான் இன்னும் பலத்த மொழி நடையைப் பயன்படுத்துகிறார்: "நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. ... நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது" (1 யோவான் 1:8-10). கிறிஸ்தவர்கள் பாவம் செய்ய முடியும் மற்றும் பாவம் செய்கின்றனர் என்பது தெளிவு. கிறிஸ்தவரல்லாதவர்கள் பாவிகளாக உள்ளனர், கிறிஸ்தவர்கள் பாவிகளாக இருப்பதில்லை என்பது கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கும் இடையிலான வேறுபாடாக இருப்ப*தில்லை.* மாறாக, கிறிஸ்தவர்கள் கிருபையினால் இரட்சிக்கப்பட்ட பாவிகளாக உள்ளனர், மற்றும் கிறிஸ்தவர் அல்லாதவர்கள் பாவிகளாக உள்ளனர், என்றென்று! என்பதே வேறுபாடாக உள்ளது.

கிறிஸ்தவர்கள் பாவம் செய்யக்கூடும் மற்றும் அப்போதும் கிறிஸ்தவர்களாக நிலைநிற்க முடியும் என்பதை அறிதல் மாத்திரமே தனிநபரான சீஷர்களுக்கு உதவும். கிறிஸ்தவர்கள் பாவம் செய்கின்றனர் என்று அவர்களுக்கு முன்னதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டால், அவர்கள் தாங்களே பாவத்தினால் வெற்றிகொள்ளப்படும்போது, தளர்வடையாமல் இருக்க சாத்தியம் உள்ளது. கிறிஸ்தவரான நீங்கள் பாவம் செய்கிறீர்களா? மற்ற ஒவ்வொரு கிறிஸ்தவரும் அவ்வாறே செய்கிறார்! நீங்கள் பாவம் செய்கிறீர்கள் என்பதால் மாத்திரம் [சபையை விட்டு] வெளியேறி விடாதீர்கள். பாவம் செய்தல் என்பது தவிர்க்க

இயலாதபடி ஆக்கினைத்தீர்ப்புக்கு வழிநடத்துவதில்லை, ஆனால் [சபையை விட்டு] வெளியேறுதல் என்பது அவ்வாறு வழிநடத்துகிறது.

இருப்பினும், நாம் பாவம் செய்கிறோம் என்று உணர்ந்தறிதல் ஒரு பிரச்சனையை முன்வைக்கிறது. நாம் பாவம் செய்யக்கூடாது, ஆனால் பாவம் செய்கிறோம் என்று கூறுவதில் முரண்பாடு இருப்பதில்லையா? நாம் பாவம் செய்யக்கூடாது என்றாலும் நாம் பாவம் செய்தால், நாம் எவ்வளவு பாவம் செய்து "தப்பித்துக் கொண்டு" இன்னமும் நித்தியத்திற்கு இரட்சிக்கப்பட்டவர்களாக இருக்க முடியும்? இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு, 1 யோவான் நிருபத்தில் உள்ள மற்ற இரண்டு கடினமான வசனப்பகுதிகளில், யோவான் நமக்கு உதவுகிறார்:

> அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை. பிள்ளைகளே, … பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், … தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான் (1 யோவான் 3:6-9).

> தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம் … (1 யோவான் 5:18).

இது, ஒரு கிறிஸ்தவருக்குப் பாவம் செய்தல் என்பது முற்றிலும் இயலாத விஷயம் என்று யோவான் அர்த்தப்படுத்துகிறாரா? இல்லை என்பது தெளிவு, ஏனெனில் அவர் அப்படிக்கூறியிருந்தால், அவர் 1 யோவான் 1:8, 10; 2:1 ஆகியவற்றில் கூறியிருப்பதில் இருந்து அவரே முரண்படுகிறவராக இருப்பார். அப்படியென்றால், அவர் எதை அர்த்தப்படுத்துகிறார்?

அந்தக் கேள்விக்கான பதிலானது, மூலபாஷையில் வினைச்சொற்களின் கால அமைவில் உள்ளது. கிரேக்க மொழியில், இவ்வினைச் சொற்கள் தொடர்ந்து நடைபெறும் செயலின் கருத்தைக் கொண்டுள்ள நிகழ்கால வினையில் உள்ளன. இவைகள் "தொடர …" என்று மொழிபெயர்க்கப்பட முடியும். நேரடியான அர்த்தத்தில், யோவான் பின்வருமாறே கூறுகிறார்:

> அவருக்குள் தொடர்ந்து வாசம்பண்ணுகிற எவனும் தொடர்ந்து பாவம் செய்கிற தில்லை.
>
> தொடர்ந்து பாவம் செய்கிற எவனும் பிசாசினாலுண்டாயிருக்கிறான் … .
>
> தேவனால் பிறந்த எவனும் தொடர்ந்து பாவம் செய்வதில்லை … .
>
> அவன் தேவனால் பிறந்தபடியினால், தொடர்ந்து பாவம் செய்ய இயலாது … .
>
> தேவனால் பிறந்த எவனும் தொடர்ந்து பாவம் செய்யான் … .

எனவே யோவான், *கிறிஸ்தவர்கள் பாவம் செய்கின்றனர் என்பது சரியே; ஆனால் அவர்கள் தொடர்ந்து பாவம் செய்வதில்லை!* என்று போதிக்கிறார்.

அவர்கள் பாவம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருப்பதில்லை. பாவம் என்பது அவர்களின் வாழ்வில் பிரதான பண்பாகவோ அல்லது வழிகாட்டும் கொள்கையாகவோ அல்லது பிரதான மனப்போக்காகவோ இருப்பதில்லை. அவர் கிறிஸ்தவரை, பாவம் செய்யாதிருக்கப் பிரயாசப்படுகிற, ஆனால் அவ்வப்போது பாவத்தின் கவர்ச்சிக்குத் தன்னைக் கொடுத்துவிடுகிறவராகச் சித்தரிக்கிறார். அவர் தேவனுடைய வழியில் வழக்கமாக, பழக்கமாக நடக்கிறார், ஆனால் சிலவேளைகளில் அவர் தடுமாறுகிறார் மற்றும் தோல்வி அடைகிறார். நீதி என்பதே அவரது வாழ்வின் நோக்கமாக மற்றும் இலக்காக உள்ளது. ஆனால் அவ்வப்போது அவர் பாவத்திற்கு இணங்கி விடுகிறார்.

இதை விவரிப்பதற்கு, வெற்றிபெறுகிற ஒரு விளையாட்டு வீரர் அல்லது விளையாட்டுக்குழு என்ன செய்கிறது என்பதைப் பற்றி நினைத்துப் பாருங்கள்: மாபெரும் கோல்ஃப் விளையாட்டு வீரர் ஒருவர், எல்லா அடிகளையும் நேராக அடிப்பதில்லை, ஒவ்வொருமுறையும் துளையினுள் பந்தைப் போட்டுவிடுவதில்லை அல்லது ஒவ்வொரு விளையாட்டிலும் வெற்றிபெற்றுவிடுவதில்லை. ஆனால் அவர் பெரும்பான்மையானவர்களைக் காட்டிலும் மிகச்சிறப்பாகச் செயல்படுகிறார் மற்றும் தமது பங்கைக் காட்டிலும் அதிகமாக வெற்றிபெறுகிறார் ... . பேஸ்பால் என்ற விளையாட்டில் மிகச்சிறப்பாக அடிப்பவர், தாம் அடிக்கும் ஒவ்வொரு முறையிலும் ஒரு ஓட்டத்தை எடுப்பதில்லை. உண்மையில் அவர், ஆடுகளத்திற்கு நடக்கிற ஒவ்வொரு முறையிலும் ஒரு அடியை அடிப்பதுகூட இல்லை. சிலவேளைகளில் அவர் வெளியேகூட அடித்து விடுகிறார். ஆனால் அவர் ஆடுகளத்திற்கு வரும்போது, நல்லது ஏதேனும் நடக்கும் என்று நீங்கள் எதிர்பார்ப்பதற்குப் போதுமான அளவு அடிக்கிறார் ... . மாபெரும் கால்பந்து விளையாட்டுக் குழுவானது விளையாடும் ஒவ்வொரு வேளையிலும் சிறப்பாக விளையாடுவதில்லை அல்லது தான் பந்தைப் பெறும் ஒவ்வொரு வேளையிலும் சிறந்து நிற்பதில்லை. ஆனால் போதிய அளவு முதல் வீழ்த்துதல்களையும் தனது விளையாட்டுகளில் வெற்றிபெறப் போதிய அளவு வீழ்த்துதல்களையும் அது ஏற்படுத்துகிறது.

கிறிஸ்தவருக்கும் அதேபோன்ற நிலையே உள்ளது: அவர் எல்லா வேளைகளிலும் பாவத்தின்மீது வெற்றி பெறுவதில்லை, ஆனால் அவர், தாம் இழப்பதைக் காட்டிலும் அதிகமாக வெற்றி பெறுகிறார். சோதனையுடனான தமது யுத்தத்தில் அவர் அவ்வப்போது தோல்வியடைந்தாலும், அதை அவர் தமது வழக்கமாக்கிக் கொள்வதில்லை. பாவம் என்பதல்ல, ஆனால் நீதி என்பதே அவரது வாழ்வின் மனப்போக்காக, திசையாக உள்ளது. அவர் அவ்வப்போது, “தவறி” விடலாம், ஆனால் பெரும்பான்மையான வேளையில் அவர் “வெற்றி பெறுகிறார்.”

கிறிஸ்தவர், தாம் பாவம் செய்யக்கூடாது, ஆனால் தாம் பாவம் செய்வார் என்பதை உணர்ந்து அறிதல் அவசியமாக உள்ளது. அவர் பாவம் செய்கிறபோது, தளர்ச்சியடையக் காரணம் எதுவும் இருப்பதில்லை, ஆனால் எழுவதற்கும் நீதியுள்ள ஒரு வாழ்வை வாழ மீண்டும் முயற்சி செய்வதற்கும் காரணம் உள்ளது.

# கிறிஸ்தவர் பாவம் செய்கிறபோது, தேவன் ஒரு நிவாரணத்தை அளிக்கிறார்

யோவான்: "... ஒருவன் பாவஞ்செய்வானானால், *நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே;* நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" என்று கூறுகிறார் (1 யோவான் 2:1, 2; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

நாம் பாவம் செய்யக்கூடாது, ஆனால் நாம் பாவம் செய்கிறோம் என்று யோவான் கூறுகிறார். ஆனால் நாம் பாவம் செய்கிறோம். அது ஒரு மோசமான செய்தியாக உள்ளது. பின்பு நற்செய்தி வருகிறது: நாம் பாவம் செய்கிறபோது, மன்னிக்கப்பட்டிருக்கத் தேவன் ஒரு அளிப்பை ஏற்படுத்தியுள்ளார்! நான் ஒரு பாவியாக இருந்தாலும், இன்னமும் நான் மன்னிக்கப்பட முடியும், மற்றும் இன்னமும் நான் பரலோகத் திற்குச் செல்ல முடியும் என்று அந்தச் செய்தி எனக்குக் கூறுகிறது!

இந்த மன்னிப்பு எந்த வழிமுறையில் நிறைவேற்றப்படுகிறது? தேவனுடைய அளிப்பு என்பது பின்வருவதாகவே உள்ளது: இயேசு கிறிஸ்து. அவர் நமக்காகப் பரிந்து பேசுபவராக, பிதாவினிடத்தில் நமது விஷயமாக வேண்டுகோள் விடுப்பவராக இருக்கிறார். அவர் நமது பாவங்களுக்குப் பரிகாரமாக - "பாவம் மூடப்பட்டு மன்னிக்கப்படுவதற்கு வழியாக" - இருக்கிறார்.[1] அவரது இரத்தத்தின் மூலமாக நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன (1 யோவான் 1:7).

அப்படியென்றால், மன்னிப்பு மற்றும் நித்திய ஜீவனுக்கு நாம் எந்த அடிப்படையில் நம்பிக்கை கொண்டுள்ளோம்? நமது உள்ளார்ந்த நற்தன்மையின் அடிப்படையிலா? நமது நற்கிரியைகளின் அடிப்படையிலா? கிறிஸ்தவ வாழ்வைப் பூரணமாக நாம் வாழுதலின் அடிப்படையிலா? இல்லை! ஆனால் தேவனுடைய கிருபை மற்றும் கிறிஸ்துவின் இரத்தம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே! நாம் தேவனுக்குச் செய்துள்ளவற்றிற்காக அல்ல, ஆனால் தேவன் நமக்காகச் செய்துள்ளவற்றினாலேயே நாம் மன்னிக்கப்படுகிறோம்!

# கிறிஸ்தவர்கள் தங்கள் பாவங்களுக்குத் தேவனுடைய நிவாரணத்தைப் பெற சிலவற்றைச் செய்ய வேண்டும்

கிறிஸ்தவர்களுக்குத் தேவன், கிறிஸ்துவின் மூலமாக அருளுகிற மன்னிப்பு, நிபந்தனைக்கு உட்பட்டது என்ற கருத்தையும் யோவான் ஏற்படுத்துகிறார். அந்த மன்னிப்பைப் பெறுவதற்குக் கிறிஸ்தவர்கள் சிலவற்றைச் செய்ய வேண்டும்.

இதைக் குறித்து நாம் திகைப்படையக் கூடாது. தொடக்கத்தில் நாம் கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறோம், ஆனால் மன்னிப்பின் நிபந்தனைகளினால் நாம் கிருபையை ஏற்றுக்கொள்ளும்போது மாத்திரமே நாம் இரட்சிக்கப்படுகிறோம்: நாம் விசுவாசித்து, அறிக்கையிட்டு, மனந்திரும்பி மற்றும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது. ஆகவே, கிறிஸ்துவின் மூல மாகக் கிருபையினாலே நாம் தொடர்ந்து இரட்சிக்கப்படுவதற்குச் சிலவற்றைச்

செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுதல் என்பது நியாயமற்றதாக இருப்பதில்லை.

ஆனால் மன்னிக்கப்படுவதற்குக் கிறிஸ்தவர்களிடத்தில் தேவன் எதைக் கேட்டுக்கொள்கிறார்? இரட்சிக்கப்பட்டவர்களாக நிலைத்திருக்க நாம் செய்ய வேண்டியது என்ன? இந்தத் தலைப்பின் கீழ் பயன்படுத்துவதற்கு மூன்று அல்லது நான்கு கருத்துக்களை நினைக்க நான் முயற்சி செய்தேன், ஆனால் கடைசியில் நான், நமது பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நம்மிடத்தில் தேவன், “மூன்று அல்லது நான்கு” விஷயங்களை அல்ல, மாறாக *ஒரே ஒரு விஷயத்தைத்* தான் கேட்கிறார் என்று முடிவு செய்தேன்! அந்த *ஒரு விஷயம்* என்ன என்பதை 1 யோவான் 1:7ல் யோவான் கூறுகிறார். ஒரு கிறிஸ்தவர் “ஒளியில் நடத்தல்” என்பது அவர் தமது பாவத்தில் இருந்து சுத்திகரிக்கப்பட்டிருப்பதற்கு அத்தியாவசியமான *ஒரே வழியாக* உள்ளது!

ஆனால் யாரேனும் ஒருவர் பின்வருமாறு மறுப்புதெரிவிக்கிறார்: “ஆனால் மனந்திரும்புதலைப் பற்றிய விஷயம் என்ன - அது அவசியமில்லையா?” ஆம், அது அவசியமானதாகவே உள்ளது: கிறிஸ்தவர் தமது பாவங்களில் இருந்து மனந்திரும்ப வேண்டும் (நடபடிகள் 8:22). *ஆனால் அவர் ஒளியில் நடந்துகொண்டிருந்தால், அவர் தொடர்ந்து/நிலையாக மனந்திரும்பிக் கொண்டிருப்பார்.* இந்த சந்தர்ப்பப் பொருளில் யோவான், “நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்” என்று கூறுகிறாரே (1 யோவான் 1:9). *ஆனால் ஒரு கிறிஸ்தவர் ஒளியில் நடந்து கொண்டிருந்தால், அவர் தமது பாவங்கள் யாரைக் கவலைக்குள்ளாக்கியதோ அவர்களிடம் அவற்றைத் தொடர்ந்து அறிக்கையிட்டுக் கொண்டிருப்பார்.* ஜெபத்தைப் பற்றிய விஷயம் என்ன? கிறிஸ்தவர் மன்னிப்பிற்காக ஜெபிக்க வேண்டியதில்லையா? நிச்சயமாகவே அவர் ஜெபிக்கவேண்டும் (நடபடிகள் 8:22). *ஆனால் ஒளியிலே நடந்து கொண்டிருக்கும் கிறிஸ்தவர் மன்னிப்பிற்காகத் தொடர்ந்து/நிலையாக ஜெபித்துக் கொண்டிருப்பார்.* ஆகவே, “ஒளியிலே நடத்தல்” என்பது, மனந்திரும்புதல், பாவத்தை அறிக்கையிடுதல், மற்றும் மன்னிப்பிற்காக ஜெபித்தல் ஆகியவற்றை உள்ளடக்கும். இவ்வாறு, ஒருவர் கிறிஸ்தவர் என்ற வகையில், மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு, மூன்று விஷயங்கள் செய்யப்பட வேண்டியதில்லை. “ஒளியிலே நடத்தல்” என்ற ஒரே *ஒரு விஷயமே அத்தியாவசியமானதாக* உள்ளது.

ஆனால், “ஒளியிலே நடத்தல்” என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? அது “பாவமில்லாமல் வாழ்தல்” என்பதை அர்த்தப்படுத்து*வதில்லை.* அது “பாவமில்லாமல் வாழ்தல்” என்பதை அர்த்தப்படுத்தும் என்றால், யோவான் “... நாமும் பாவமில்லாமல் நடந்தால் ... அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்” என்று கூறியிருப்பார். ஆனால் நாம் பாவமில்லாமல் நடந்தால், மன்னிக்கப்படுவதற்கு நாம் பாவங்கள் எதையும் கொண்டிருக்கமாட்டோம்! ஆகவே, “ஒளியிலே நடத்தல்” என்பது பாவமில்லாமல் வாழ்தல் என்று அர்த்தப்பட *முடியாது.*

அப்படியானால் அது எதை அர்த்தப்படுத்துகிறது? இது தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்தின்படி வாழ்வதற்கு *ஊக்கமாகப் பிரயாசப்படுதல்* என்பதை மாத்திரம் அர்த்தப்படுத்தக் கூடும் என்று எனக்குக் காணப்படுகிறது.

“ஊக்கமாகப் பிரயாசப்படுதல்” என்பது ஒளியிலே நடந்துகொள்வதற்கான திறவுகோலாக உள்ளது. கிறிஸ்தவர் பாவமில்லாது வாழ்வதில்லை, ஆனால் அவர் தமது சொந்த சூழ்நிலைகளில், தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்குத் தம்மால் முடிந்த அளவுக்கு மிகச்சிறப்பாக எப்போதும் பிரயாசப்பட்டுக்கொண்டிருக்கிறார். அவர் அடிக்கடி இடறுகிறார், ஆனால் அந்த இலக்கை அடைவதற்கு அவர் எப்போதும் முயற்சிசெய்து கொண்டிருக்கிறார். அதை அவர் செய்தால், அவர் “ஒளியிலே நடக்கிறார்” என்று தேவன் அவரை ஏற்றுக்கொள்கிறார் என்பதாக நாம் விசுவாசிக்கிறோம்.

நாம், ‘‘ஒளியிலே நடந்துகொண்டிருந்தால்,’’ பின்வரும் ஆசீர்வாத மான வாக்குத்தத்தத்தைக் கொண்டிருக்கிறோம்: “அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கம்.” இங்கு மீண்டும், வினைச் சொல்லின் நிகழ்காலம் பயன்படுத்தப்பட்டுள்ளது; செயல் தொடர்ந்து நடைபெறுதல் என்ற அம்சம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதை நாம் பின்வருமாறு மொழிபெயர்க்க முடியும்: ‘‘நாம் ஒளியிலே தொடர்ந்து நடந்துகொண்டிருந்தால், நாம் ஒருவரோடொருவர் தொடர்ந்து ஐக்கியப்பட்டிருப்போம்; அவரது குமார னாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, தொடர்ந்து நம்மைச் சுத்திகரிக்கும்.’’ கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் ஒளியிலே நடந்துகொண்டிருக்கிறோம், கிறிஸ்துவின் சுத்தி கரிக்கும் இரத்தத்தின் பொழிவில் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறோம்! நாம் பாவம் செய்கிறபோது, விரைவாகவே இயேசுவின் இரத்தம் நம்மைச் சுத்தி கரிக்கிறது, மற்றும் தேவன் நம்மை மன்னிக்கிறார்.

இது, நான் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு ஊக்கமாய்ப் பிரயாசப்படும் கிறிஸ்தவனாக இருந்தால், ஒருநாளில் நான் ஒரு மோசமான சிந்தனையைக் கொண்டிருந்து, மன்னிப்பிற்காக ஜெபிக்க ஒரு வாய்ப்பைப் பெறுவதற்கு முன், மாரடைப்பினால் திடீரென்று இறந்துவிட்டால், ஜெபிக்கப்படாதிருந்த அந்த ஒரு பாவத்தினிமித்தம், நான் நரகத்திற்குச் சென்றுவிடுவேன் எனறு கவலைப்படத் தேவையில்லை என்று அர்த்தப்படுகிறது! மாறாக, நான் அவருக்குக் கீழ்ப்படிய தொடர்ந்து பிரயாசப் பட்டுக்கொண்டிருப்பதால், இயேசு எனது பாவங்களைத் தொடர்ந்து மன்னித்துக் கொண்டிருக்கிறார் மற்றும் நான் பரலோகத்திற்குச் சென்றுகொண்டிருக்கிறேன் என்பதில் நிச்சயமாயிருக்க முடியும் என்பதால், நான் தொடர்ந்து அகமகிழ முடியும்!

## முடிவுரை

இன்னும் ஒரு கேள்வி உள்ளது: நீங்கள் ஒளியிலே நடந்துகொண்டு, தேவனுடைய சித்தத்தைத் தேவனுடைய வழியில் செய்வதற்கு ஊக்கமாகப் பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களா?

நான் உங்களை நன்கு அறிந்திருந்தால், நீங்கள் ஒளியிலே நடக்கிறீர்களா இல் லையா என்று என்னால் கூற முடியும் என்று நினைக்கிறேன். குறைந்தபட்சம், கிறிஸ்தவர்கள் வேதாகமத்தை வாசித்தல் அல்லது ஜெபித்தலில் ஆர்வம் இல்லாதிருக்கும்போது, அவர்கள் முறையாக ஆராதனையில் கலந்து கொள்ளாதிருக்கும்போது, அவர்கள் உலகப்பிரகாரமான நடவடிக்கைகளில் பங்கேற்கும்போது, அவர்கள் தேவனுக்காக வாழத் தங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்வதற்கு ஊக்கமாகப் பிரயாசப்படு*வதில்லை* என்று

கூறமுடியும். ஆனால் உங்கள் விஷயத்தில் எனது தீர்ப்பு தவறானதாக இருக்கக்கூடும்.

இதற்கு மறுபுறத்தில், நீங்கள் ஒளியிலே நடக்கிறீர்களா இல்லையா என்று நான் நிச்சயமாக அறியாதிருந்தாலும், *நீங்கள்* அதை அறிவீர்கள் அல்லவா? நீங்கள் தேவனுடைய வசனத்தின்படி நடக்க ஊக்கமாகப் பிரயாசப்படுகிறீர்களா இல்லையா என்பதை *நீங்கள்* அறிவீர்கள். நீங்கள் மற்றவர்களை முட்டாளாக்கலாம், ஆனால் நீங்கள் அனேகமாக உங்களையே முட்டாளாக்க முடியாது.

வேறு ஒருவர் அறிந்திருக்கிறார். நீங்கள் உண்மையாகவே ஒளியில் நடக்கிறீர்களா, தேவனைப் பின்பற்ற ஊக்கமாகப் பிரயாசப்படுகிறீர்களா என்பதை *தேவன்* அறிகிறார். நீங்கள் மற்றவர்களை முட்டாளாக்கலாம்; உங்களையேகூட நீங்கள் முட்டாளாக்கிக் கொள்ளலாம். ஆனால் நீங்கள் தேவனை முட்டாளாக்க முடியாது! உங்களிடம் எவ்வளவு எதிர்பார்க்கப்பட முடியும் என்பதை அவர் அறிகிறார். உங்கள் இருதயமும் உங்கள் விருப்பநோக்கமும் அவரது வசனத்தின்படி வாழ உங்களால் முடிந்தவற்றை செய்வதாக உள்ளதா என்பதை அவர் அறிகிறார். எனவே உண்மையான கேள்வி பின்வருமாறு உள்ளது: தேவன் எதை அறிகிறார்? தேவன் உங்களை என்ன விதமாகக் காண்கிறார்?

---

குறிப்பு

[1]W. E. Vine, *An Expository Dictionary of New Testament Words,* vol. 3 (Old Tappan, N.J.: Fleming H. Revell, 1966 reprint), 224.